சைவ வித்தியா[illegible] வெளியீடு:
ஆரம்பம்: கிரோதி ஸ்ரீ (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

JAFFNA CAMPUS LIBRARY PERIODICALS DIVISION RECEIVED

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 60

புத் - 94 ] யாழ்ப்பாணம்:- துந்துபி வரு, மார்கழி மீ 17, 24, 31-12-82 வெள்ளிக்கிழமை [இல - 13

# ஏத்தி இறைஞ்சுபவர் இல்லங்கள்தோறும் எழுந்தருள்பவன் ஈசன். - இவ்வின்பம் ஈடு இணையற்றதென்று இன்னிசை பாடுவோம்

## வாழ்த்தி வாழ்த்தி மார்கழி நீராடி நன்றி நவில்வோம்

திருக்கார்த்திகை. விநாயகர்சட்டி திருவெம்பாவை இம்மூன்று தெய்வீகக்காலங்களும் ஒரு தொடர்பாக வழிபடும் அடியவர் உள்ளத்தை உவகைமிக்க பேரின்ப உணர்வினை உண்டுபண்ணும் பண்பின.

பிள்ளையார் பெருவிரதம் கொள்ளுவோர் தொடர்ந்து மார்கழித் திங்களில் மனைகடோறும் பிள்ளைப் பெருமான் உருவத்தைத் திருநீற்றுக் கருப்பொருளாகும் பசுவின் சாணத்திலோ மங்கலப் பொருளாம் மஞ்சளிலோ ஆக்கி வணங்குவர். மார்கழி நீராடி மாணிக்க வாசகப் பெருந்தகை பாடிப் பரவிய திருப்பள்ளி எழுச்சியும் திருவெம்பாவையும் ஓதி அப்பெருங் குரவரின் புகழ் சாற்றும் திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன் கேட்டுப் பயனடைவர்.

### மார்கழி முற்றிலும் மனவமைதிதரும் வழிபாடு

கார்த்திகைக் கார்திகையின் கவினுர் சோதி போன்ற ஒளிபெருக்கும் நாள் மார்கழித் திருவாதிரை; ஆருத்திரா தரிசனம் அணையும் அரியநாள். இத்தகைய உத்தம வேளையில எல்லா ஆலயங்களிலும் விடியற் காலையிலே திருவெம்பாவை விசேட பூசைகள் நடைபெறும். வீதியில் அடியார்கள் திருப்பள்ளிஎழுச்சியும் திருவெம்பாவையும் ஓதிச் சங்கு நாத மொலிக்க ஊர்வலமாகப் பாதயாத்திரை செய்யும் செம்மையான நிகழ்ச்சி செவிகளும் கண்ணுக்கும் மட்டுமல்ல எல்லா அங்கங்களுக்கும் ஊக்கம் ஊட்டும் தகையது.

---

உ
திருச்சிற்றம்பலம்
போற்றி அருளுகநின்
ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின்
அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும்
ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும்
காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட்
கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ
ராடேலோர் எம்பாவாய்,
திருச்சிற்றம்பலம்.

---

### அகண்ட திருவாசக பாராயணம்

நிகழும் துந்துபி ஆண்டு மார்கழித்திங்கள் (25-12-82 சனிக்கிழமையன்று நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில திருவாசகம் முற்ற ஓதும் திவ்விய வைபவம் நிறைவெய்தியது.

---

### ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் முற்று ஓதல்

இடம் : சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்,

காலம் : 1-1-1983 சனி, 2-1-1983 ஞாயிறு

நேரம் : காலை 9 மணி முதல் 1 மணி வரையும்
மாலை 3 மணி முதல் 7 மணி வரையும்;

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள் ஆரம்பித்துவைப்பார்கள்

அன்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்

திருவாதவூரடிகள் திருத்தாள் போற்றி.

த. சண்முகலிங்கம்
கௌரவ காரியதரிசி
சைவபரிபாலன சபை.

மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை.

---

### சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## திரு. இராசரத்தினம் ஞாபகார்த்த முயற்சிகள்

பரசமய ஊடுருவலுக்கு யாழ்ப்பாணச் சைவமக்கள் இலக்காகியிருந்த இழி நிலையினை ஒழிப்பதற்காக மூழுமூச்சாக உழைத்தவர் - ஊர்கள் தோறும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவவேண்டும் என்ற நாவலர் இலட்சியத்தைப் பெருமளவில் செயற்படுத்துவதில் வெற்றியீட்டிய தன் மூலம் இரண்டாவது நாவலர் எனச் சைவத்தமிழறிஞர்களால் போற்றிக் கொண்டாடப்பட்டவர் - 150 இற்கு மேற்பட்ட சைவப்பாடசாலைகளை நிறுவி நிர்வகித்தும் ஒரு சைவாசிரிய பயிற்சிக்கலாசாலையை நிறுவி சைவாசிரியர்களை உருவாக்கி அப்பாடசாலைகளில் பணியாற்ற வித்தும் சைவப் பயிர் தழைத்தோங்க வைத்தவர் - திருநெல்வேலியில் சைவ அநாதர்களுக்கென ஒரு பராமரிப்பு நிலையம் நிறுவிச் சைவக்கல்வி கிடைக்க வழிசெய்தவர் - இணுவிலிலும் ஒரு சைவ அநாதர் இல்லம் நிறுவ நிலம் வாங்கி ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில காலன் கைப்பட்டவர் -

புகழ்வோர் செயல்வீரம் மிக்க பெருமகன் இராசரத்தினம் அவர்கள் பிறந்த திருக்காவிடில் இன்றிருக்கும் சைவச் சனத்தொகையில பெரும் பகுதி பரசமயச் சனத்தொகையாகியிருக்கும்.

எனவே அம்மகானின்

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

---

### ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம், அளவெட்டி

ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்

### ஜயந்தி விழா

நிகழும் துந்துபி ஆண்டு மார்கழித் திங்கள் 21 ஆம் நாள் (5-1-1983) புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் இவ்வாச்சிரமத்துக்குச் சேர்ந்த சிவலிங்க ஆலயவளவில் விசேடமாக அமைக்கப் பட்ட பந்தலில் குருதேவர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளது 56 ஜயந்தி விழா கொண்டாடப் படவுள்ளது. ஆச்சிரமத்தி லிருந்து காலை 7 மணி ஊர்வலம் சிவலிங்க ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் குருதேவர் 5-1-83 தொடக்கம் 9-1-83 வரை இவ்வாச்சிரமத்தில் தங்கியிருப்பார்கள். பின் வரும் திகதிகளில் விரும்பிய அடியார்கள் குருதேவரை ஆச்சிரமத்திற் சந்திக்கலாம்.

6-1-83 வியாழன் பிற்பகல் 2மணி தொடக்கம் 7மணி வரை
7-1-83 வெள்ளி பிற்பகல் 2மணி தொடக்கம் 5மணி வரை
8-1-83 சனி பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை
9-1-83 ஞாயிறு காலை 8 மணி தொடக்கம நண்பகல் 12 மணி வரை

---

## அடிமுடி அறியமுடியாது அலையும் தலைவர்கள்

### மயக்கமுற்றவர்கள் மக்களுக்கு வழிகாட்ட வல்லவரா?

### ஆணவத் தாண்டவம் அனைத்துலகையும் அபாயத்தில் ஆழ்த்துகின்றதே!

அணுக்குண்டு சல வாயுப்பலவாயுதம் என்ற வகையில அங்குசப்படை திரட்டிக் காலனின் கையாட்கள்போலப் பயங்கரவாகளாகிக இயங்கும் இரு வல்லரசுகள் ஒருவருக்கொருவர் உபதேசம் உரைப்பதுவும் அதே வேளையில் ஒற்றுக் கேட்பதுவும உளவு பார்ப்பதுவும் ஆன எமாற்றத் தந்திரங்களைக் கையாள்வதுவும் இக்கால அரசியல் இலட்சியமாகும்.

இந்த வல்லரசுகள் இருவரும் நிலையான நிம்மதியைப் பெறமுடியாத நிலையில யாரை யார் முதலில் வீழ்த்துவதென்ற சூழ்ச்சியைச் செய்து கொண்டு இதர நாடுகளுக்கெல்லாம் இதோபதேசம செய்யும் படை நாடகத்தையும் உலகம் கண்டுகொண்டே மயங்கி வாடுகின்றது.

இந்த மாதிரியாகவே இங்கு ஆளுங் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் ஒருவரை ஒருவர் புறங்கண்டு அரசியல் வலிமை பெற நீண்டதோர் நாடகம் நடிக்கின்றார்கள்.

இவர்கள் அரசியலில் ஒரு அறவியல் என்ற உண்மையை அறியார். அதன் அடிமுடியை எப்பொழுதாவது காண இயலாதவர்.

வரலாற்றிலே அரியோத[illegible] முதியோர் இராவண இயக்கத்தினர் இவர்கள் கர்வம் கொண்டு ஈற்றிலே கர்வ பங்கமடைந்த காட்சியைக் காணும் இக்கால மக்கள் இந் நாட்களிலே இங்கு நிகழும் ஆணவப் பலப்பரீட்

வளர்ச்சி 2ம் பக்கம்

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

துந்துபி ௵ மார்கழி ௴
17, 24, 31, 12-82 வெள்ளி

## உலகம் உய்ய வழிஉண்டா?

•••○○•••

இன்று மனித இனம் என்றுமில்லாதவாறு குணம் குன்றி இழிவுற்றிருக்கின்றதென்று எல்லா நாடுகளிலும் எச்சரிக்கை எழுகின்றதே. இதற்கு என்ன ஏது என்று கேள்வி எழும்பும் அதே வேளையில் நாம் உலகம் உய்ய வழி உண்டா எனவும் வினவவேண்டியிருக்கின்றது!

வரலாறு வரையப்பட்ட காலம் தொட்டு மனிதன் தான் வாழ வேண்டும் என்ற விருப்பினால் வாழ்க்கையைப் பல்வேறுவகையாக அமைத்து வளந்தேடி ஊர் விட்டு இன்னோர் ஊருக்கும் நாடு கடந்து வேறோர்நாட்டுக்கும்தாவித் திரிந்து தனது குணநெறியைத் தேவைக்கும் அவாவிற்கும் ஏற்ற வண்ணம் திரித்துப் பழவைண்ணம் இருந்தான் என இதிகாசம் சரித்திரம் முதலாம் நூல்களிலிருந்து அறிகின்றோம். இந்த அநுபவத்தை நாகரிகம் என்றும், கலாசாரம் என்றும் கலைவல்லார் அறிந்து பெரிதுபடக் கூறினர்; உலகிற் பலவேறுபண்பாடுகள் இருந்தன, அவற்றுக்கெல்லாம் பெயரிட்டு ஒரு மனிதநெறித் தொடர்களையும் ஆக்கிவிட்டனர்.

விஞ்ஞான நுணுக்கத்தின் வளர்ச்சியால் இன்று உலகத்தில் என்ன நிகழ்கின்றது எது நிகழ இருக்கின்றதென நாள்தோறும் அறியக்கூடிய வகையிற் செய்திகள் பரவுகின்றன. அதிகாலை தொடக்கம் நள்ளிரவுவரைகளும் வானொலி நானிலச் செய்திகளை எல்லோரும செவிமடுக்கச்செய்கின்றது. இந்த வழியிலே வெளிவரும் செய்திகளிற் பெரும்பான்மை இயற்கை அட்டூழியத்தையும் செயற்கைத தீமையையும்பற்றியேயுள்ளன; மகிழ்ச்சிக்கும் மன எழுச்சிக்கும் உரிய செய்திகள் மிகமிகக் குறைந்தபட்சம் ஆகும்.

ஆகவே உலகம்எவ்வழிச் செல்கின்றதென்பதை இலகுவில் எவரும் ஊகிக்கமுடியும்; தீமையை நோக்கித் தீவிரமாகமனிதஇனம் போய்க்கொண்டு இருக்கின்றதே! பூகம்பத்தால், புயலால், மின் வேகச் சூறாவளியினால், ஏந்திரக் கோளாறுகளினால் உயிர் நீங்குவன பெருந்தொகை, நாடுகளுக்கிடையே நடக்கும் போர்கள், — உண்டு கூலியுழைத்து ஆடும் நாடுகள் சில — ஊர்வரைத் புற்று நோய் போல பற்றி அழிவு செய்வன பல.

நாகரிக வளம் பெற்ற நாடுகள் வல்லரசு என்ற சொல் விருது பெற்ற நாடுகள் உணவுக்கும் உடைக்கும் உறங்குமிடத்துக்கும் செலவு செய்யும் பணத்தொகையிலும் பன்மடங்கு மேலதிகமாகப் படுகொலைக்குரிய அணுவாயுத உற்பத்திக்கு விரயஞ்செய்கின்றனர். ஆக்க முயற்சியிலும் பார்க்க அழிவுத் தொழிலுக்குப் பொருள் ஆக்கத்தை விரயம் செய்வதுதான் நாகரிகமாகிவிட்டது, இந்த வல்லரசுகளிற் பல நாத்திகக்கொள்கைக்கு மாறினவர்கள், இருந்தும் கடவுள் உண்டென்ற நியதிக்கு நேர் விரோதமாக மனிதர்களையும் மாவினத்தையும் கொன்று குவிக்கின்றனர்.

இந்தச்சூழ்நிலையில் எந்த வகையிலே உலகம் உய்ய முடியும்?

அடிப்படை உரிமைகள் என்று ஒரு சொற்றொடரைக் கிளிப் பிள்ளைகள் போல எடுத்துமுன்வைத்து உலக ஞானம் உரைக்கும் அரசுகள். அரசியற்றலைவர்கள் அடிப்படையான சமய ஒழுக்க நடைமுறையைக் கைவிட்டுக் கடவுட் கடமையை மறந்து மாசாலம் செய்வதை இனிமேலாவது மக்கள் உணரமாட்டார்களா? அவ்வாறு உண்மை நிலைமையை உலகம் உணரும் பொழுது தான் உய்ய வழியும் உதயமாகும்.

வழிகாட்டிகளாக முன் வந்திருக்கும் வல்லரசுகள் எந்த விதமாக வழி தடுமாறவைக்கின்றனரோ அவ்வழிதான் நாட்டில்நாடகம் நடத்தும் அரசியற்றலைவர்களும், படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயில் என்ற வகையில் இறை நெறிக்கு முழு மாறாக மக்களை வழி தவறச் செய்கின்றனர்.

கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறுவது எத்தனைப் பொய்யோ அத்தனை தருமநெறி என்பது அதர்மவழி ஆகின்றது. எந்த ஒரு நல்ல கொள்கையை எடுத்து முன்வைத்து ஆவேச அபிமானப் பேச்சு நிகழ்த்தப்படுகின்றதோ அந்த ஒரு கூற்றுக்கு நேர் விரோதமான செயல் நடைபெறுகின்றது. நல்லெண்ணம், இன்னாசெய்யாமை, உரிமை கடமை இவற்றுக்கெல்லாம் அவமதிப்பை உண்டாக்கிவிட்டது இன்று நிலவும் அரசியல்,

மகாத்மா காந்தியைப் பார்; நாவலர்பெருமானை நாடு என்று வாய் சொல்லும். ஆனால் வாழ்க்கையிலே காந்தீயத்துக்கும் நாவலர் நெறிக்கும் முற்றிலும் முரண்பாடானசெயல்களே நிகழும்,

இந்த வேடம் மாறினால் உலகம் உய்ய வழி சிந்தையிலே தெளிவாகும்,

அப்பர் சுவாமிகள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கடமைக்கு இலக்கணம் வகுத்து அவ்வழி தாம இயங்கி அதன் பயனை உலகம் காண வைத்தனர்.

உலகம் உய்ய ஒரு உண்மைப் பரோபகாரியாவது— காந்தி வினோபா, நாவலர், இராமநாதன் போன்றவர் உதிக்கவேண்டும். உதித்தால் உண்மையான தொண்டு உருப்படும். ஒருவரை ஒருவர் ஏமாற்ற உரையால ஒதுக்கும் எண்ணம ஒதுங்கிவிடும். அன்பு நெறி அன்று, அன்றுள வாழ்க்கையில் அமையும். கொள்ளையடிக்கும் கொடூரம் குறைந்தொழிந்துபோகும், களவும் கயமையும நீங்கும். கொலை செய்யும் நிலைமை இலாது போகும். அப்பொழுது நாட்டில் அமைதி அமையும். மக்கள் மக்களாய் வாழ்வர், உலகம் உய்யும்,

""○○""

# தேவத்தானத்தில் சிறந்த பல சேவைகள்

## மகளிர் இல்லம் துர்க்கை ஆலய நிர்வாகத்தால் அமைந்தது

ஆலய பரிபாலனம் இரா அறங்காவலர் பரிபாலனம் ஆதியன எவ்வாறு அமையவேண்டுமென்பதை இப் பெரும் பொறுப்புடையவர்கள் எப்பொழுதும் ஆராய்ந்து ஆவன செய்தாலன்றி அறநெறி ஆற்றுபவர்களாக மாட்டார்.

கோயிலும் கோயிற் சூழலாம் கோட்டமும் கும்பிடுவதற்கும் கும்பிடுவோரை வழிப்படுத் துவதற்கும் வழிப்படுத்துவோரை ஓம்புதற்கும் உரியன வாய் விளங்கவேண்டும்.

தருமபுர ஆதீனம் பல கல்வி நிலையங்களையும் ஆலயங்களையும் நெறியாகப் பரிபாலித்து வருகின்றதென்ற ஒரு உதாரணத்தைமட்டும் எடுத்துக் காட்டி இவ்வழி தெல்லிப்பளை துர்க்கா தேவத்தானம் அறங்காளல என்ற கொள்கையை நன்குணர்ந்து நனி கடமைகளைப் புரிந்து வருகின்றதென்பதற்கு அடையாளமாகச் சென்ற கார்த்திகைத் திங்கள் 26 ம் நாள ஆங்கோர் மகளிர் இல்லம் அமைக்கப்பட்டுச் சேவை புரிவதைக் குறிப்பிடலாம்.

விரிந்த வண்ணம் இத் தேவத்தான சேவையில் அறங்காவலர் - பரிபாலன சபையினர் பூசைசெயும் அந்தணர் தொண்டு புரியும் அடியார்கள் - தொழுதெழும் தொண்டர்கள் எல்லோரும் பங்கு கொள்கின்றனர். உபயஞ் செய்வோர் உள்ளத்துணர்ச்சியுடன் உவகை மேலெழத் துர்க்கைக்குத் தமது தானங்களை அர்ப்பணிக்கின்றனர்.

குருகுலம் மகளிர் இல்லம் புராணபடனம், சற்பிரசங்கம் என்றெல்லாம் நன்றே புரியும் தேவத்தானத் தொண்டர்களின் தலைமைக்குத் தகைமை சிவத்தமிழ்ச் செல்வி. துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

தேவத்தானச் சேவையை நேரே கண்டு அதற்கு உதவ ஆவல் கொண்டு மகளிர் இல்லம் அமைக்கப் பொன் கொடுத்துதவிய சிவபுண்ணியசீலர் இ. சின்னையா அவர்கள் மலேசியாவிலே ஈப்போ நகரிலே கடமை புரிகின்றவர். தமைத் தந்த தந்தை தாயர் நினைவுச் சின்னமாக இந்த மகளிர் இலலம் நிலவவேண்டும் என்று இவர்களுக் கெழுந்த அரிய சிந்தனையின் சிறப்பைக் கண்டு தமிழகம் மகிழ்ச்சியடைகின்றது.

இல்லத் திறப்பு விழாவிலே தேவத்தானக் குருக்கள் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் சிவநெறிப் புரவலர் க. கனகராஜா, மைதடி அன்பர் திரு. ஆ. கந்தையா முதலியோர் பங்குபற்றினர் துர்க்காதுரந்தரி தலைமையில். ——

## சைவ வித்தியா விருத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் சைவப்பணியின் தரமறிந்து, தியாகத்தை பக்தியோடு நினைவுகூர்ந்து அன்னாருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய, தட்டிக் கழிக்கவொண்ணாப் பெரும் பொறுப்பை உணர்ந்து, சைவ உலகிற்கு வழிகாட்டும் வகையில இந்து போட் இராசரத்தினம் நினைவாக பல முயற்சிகள் எடுக்கத்திட்டமிட்டுள்ளது நாவலர் சபை. பல அரிய சைவத் தமிழ்ப்பணிகள் மூலம் சைவ உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்து வந்துள்ள நாவலர் சபை விரைவில் திரு இராசரத்தினம் அவர்களின பணிகளை உலகறியவைக்கும் விதத்தில் அவர் பற்றிய ஒரு வரலாற்றுத் தொகுதி வெளியிடவுள்ளது. இரண்டாவதாக அப்பெரியாரின் பெயரில் சைவசித்தாந்த உயர்கல்வி பீடம் ஒன்று அமைவதற்கு முயற்சி எடுக்க விருக்கிறது. மூன்றாவதாக அப்பெரியாரின் பெயரால் உயர்கல்விப் புலமைப் பரிசில் நிதியொன்று நிறுவ இருக்கிறது. நான்காவதாக இப் பெரியார் நினைவாக இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு முத்திரை பதிக்கப்பட்டுள்ளது ... கார்த்தபால் தலைகள் வெளியிட இருக்கின்றது என சைவ வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகின்றது.

— "முருகனடிப்பொடி"

அடி முடி அறிய ... ...

1-ம் பக்கத்து வளர்ச்சி

சையையும் உள்ளவாறு உணர்ந்து மாயை வழிப் போய்த் தீயவராகாமல் அறநெறியை அறிந்து அவ்வழி நின்றாலன்றிப் பேராபத்து நிகழ்வதை யாராலும்தடுக்கமுடியாது.

மக்கள் வாழ்வாங்கு வாழ வேண்டுமேயானால் அரசியல் வலையில் அகப்படாமல் மனச்சான்றின் வழிசென்று மனு நீதி முறை நின்று செயற்படுதலையே நாட வேண்டும்.

உண்மை ஒழுக்க நெறியென்றொன்றுண்டு. அவ்வழியிலே சந்தர்ப்ப வாதத்துக்கும் தருணத்துக்குத் தக்க தாளம போடுதலுக்கும் இடம் இருக்கமாட்டாது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சுலோகத்தை எப்போதும் ஓதிக்கொண்டு உரையாற்றும் தலைவர்கள் யாது செய்கின்றனர் நடைமுறையில்?

## பக்தி வளர்க்கும்

சாதனங்கள் வரிசையில்!

"பக்தித் திரைப்படங்கள் பக்தியுணர்வை வளர்க்கின்றனவா?" என்ற தலைப்பில இணுவில் கலை இலக்கியக் கழகம் பட்டிமன்றம் ஒன்றை நடாத்தியது. இணுவில்கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபை மடாலயத்தில் கடந்த 5-1(-82 வெள்ளி இரவு பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்ற பட்டி மன்றத்தில் பக்தித்திரைப்படங்கள் பக்தி உணர்வை வளர்க்கின்றன என்ற கருத்தை வலியுறுத்தச் செல்வன் க. பவன் தி. திவிபன் ச. முருகதாஸ் ஆகியோர் வாதட்டனர். செல்வன் அ. சண்முகலிங்கம் க. பரமேஸ்வரன க. சச்சிதானந்த மூர்த்தி ஆகியோர் எதிர்வாதம் நிகழ்த்தனர் தலைவர் தமது தீர்ப்புரையில் புராணபடனம், திருமுறை ஓதுதல், தியானம, ஜெபம், ஆலய தரிசனம் சற்பிரசங்கம், தீட்சை முதலிய பக்திவளர்க்குஞ் சாதனங்கள் போல நிறைந்த பயனைத்தராது போனாலும், சமய தத்துவங்களை நன்கறிந்தவர்கள எழுதிய புராண இதிகாச திரைக்கதை வசனங்களோடு, பக்தி அனுபவமுள்ள நடிகர்களால் நடிக்கப்பட்டு, பக்தியைத் தூண்டும வளர்க்கும் சூழலின் பின்னணியில் உண்மையாக பக்தி வளர்க்கும் நோக்குள்ள தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் முழுநீளப் பக்தித் திரைப்படங்களும பக்தியுணர்வை மக்களிடையே எந்த அளவிலோ வளர்க்கவே செய்கின்றன, என்று குறிப்பிட்டார்.

செயலாளர் கழகஇணைப் பாளர் திரு. து. திருநந்தகுமார் நன்றியுரை கூறினார்.

# நீதியார் பெம்மான் நின்றாடும் அரங்கு

## நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை ஓதுவார் உள்ளம்

திருநீறணியும் செந்நெறியாளரின் உள்ளம் தில்லையம்பலர் ஈசன் திருநடனம் ஆடும் இடமாகும் அரங்கென்றார் புலவர் அவ்வாறே ஐந்தெழுத்தை முறைப்படி ஓதுவார் நம் உள்ளமும் நடராசப் பெருமானின் நடன மேடையாகும் என்றனர் அப்புலவர் யார் அந்த யதார்த்த வார்த்தை உரைத்த பேரறிஞர், வெண்பாவிற் புகழேந்தி என்ற பண்பாளர்தான் அப்புலவர் ஆனால் அப்புலவர் அரிநாராயண பத்தர் என்று அன்னாரியற்றிய நூல்களில் அகச்சான்று காட்டி எண்ணினர் ஆராய்ச்சியாளர் அப்படியாயினும் சிவசின்னங்களின் செம்மையை நன்கு புரிந்தவராய்ப் புகழேந்திப் புலவர் இருந்தார் என்பது அந்த அறிஞர் இயற்றிய செஞ்சொற்றமிழமுதமாம் நளவெண்பாவிலே கலிநீங்கு காண்டத்தில் ஒரு பாட்டாற்புலனாகின்றது.

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை ஓதுவார் உள்ளம் எனவுரைப்பார் — நீதியார் பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை அம்மானின் றாடும் அரங்கு.

நீற்றின் சீர்மையை நேராக எடுத்துத் திருவாய் மலர்ந்த திருஞானசம்பந்தப் பெருமானார் மாலொடயனறியாதவண்ணமும் உள்ளது நீறு என்று சொல்லும் பொழுது அந்த வண்ணத்தராகிய மெய்யடியார் எண்ணத்தில் ஈசன் நடமாடிய வண்ணம் இருப்பன என்று சொல்லவும் வேண்டுமோ!

இன்று எங்கள் குரவர் நமச்சிவாய நற்நாமத்தின் வண்ணத்தை விளக்க அடிமுடியறியாதசிவந்த அவ்விருவரைச் சுட்டிக்காட்டி அழகாகத்திருவாய் மலர்ந்தனர்

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

# நாவலர் கோட்ட மரபில் வளர்ந்த நற்பயிரின் மறைவு

### வரலாற்றுத் துறையில் வல்லவர் வை. முத்துக்குமாரசாமி

இலகுபோதம் தொடர் புத்தகங்களைப் படித்தவர்களுக்கு நாவலர் கோட்டத்து நல்லறிஞர் திரு. அ. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் நாமம் நீங்கா நினைவில் இருக்கும். அபிதானகோசம் ஆங்கிலம்-தமிழ் அகராதி முதலிய நூல்களை ஆக்கித் தமிழ்த் தொண்டாற்றிய பெரியசர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள். அன்னாரின் உடன்பிறந்தாரின் புத்திரன் வைத்தியலிங்கம் அவர்கள் புத்தக நிலையம் நடத்தியதுமன்றி நாவலர் அச்சுக்கூடத்தையும் நன்கு பரிபாலித்து மொழித் தொண்டாற்றி வந்தனர். இவர்கள் எல்லோரும் நாவலர் நாமத்திலும் நாவலர் வாழ்ந்த வீதியிலும் பேரபிமானங் கொண்டவர்கள். திரு. வைத்தியலிங்கம் அவர்களின் புத்திரன் திரு. வை. முத்துக்குமாரசுவாமி முறைப்படி கல்விகற்றுப் பட்டதாரி ஆகக் கொழும்பு மாநகரிலே பரியோவான்... கல்லூரியிலே ஆசிரியராக் கடமைபுரிந்துகொண்டு நூலாராய்ச்சியில் விடாமுயற்சி செய்து தமிழக முன்னோரின் வரலாற்றை எழுதுவதில் அபிமானங் கொண்டதன் பயனாகப் பல நூல்களை வெளியிட்டனர் நாவலர் பெருமானைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் வரலாற்று நூல்களை வெளியிட்டனர்' பொன்னம்பலம் புத்திரர்கள் கலைஞர் அருணசலம் பரோபகாரி இராமநாதன் ஆகிய இருபெரும் வீரர்களைப்பற்றி வரலாறு எழுதியதுடன் அவர்களின் முன்னோராகிய வீரர் முத்துக்குமாரசுவாமியின் வரலாற்றையும் வெளியிட்டனர்.

கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும் இங்கிலாந்து சென்று இலண்டனிலே கலைத்துறையிற் பல வேறுவகையிற் பணிபுரிந்தும் அங்கு சைவநெறி பரப்பச் சங்கம் அமைத்து ஆலய வழிபாட்டுக்கடிகோலியும் பெருந்தொண்டு நனி ஆற்றி வந்தனர்.

இந்துசாதனம் ஆங்கிலம் தமிழ் இதழ்களுக்கு விஷய தானம் விசேடமாகச் செய்து சைவபரிபாலன சபையின் விருத்தியிற் பெரிதும் அபிமானம் பூண்டவர். சைவப்பிரகாச அச்சகத்திலே தமது வெளியீடுகளை அச்சேற்றும் உபகாரியாகவும் விளங்கினர்.

கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவென்றுணர்ந்து மேலும் மேலும் கற்றுத் தேறுவதில் உற்ற கருத்துடையவராகி விருத்தியடைந்த சைவத் தமிழபிமானியான இவரின் பிரிவு சைவ உலகுக்குப் பெருங் கவலைக்குரிய நிகழ்ச்சி. ✕✕

விளக்கைப் பிடித்துக்கொண்டு

# கிணற்றில் வீழ்வதா?

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாடாத செயற்கை மலர்களா?

### ஆறுண்டுக்கொருமுறை இவ்வாறு நடக்கும் இலவுகாத்த கிளிபோல் இருப்பர் வாக்காளர்கள்

———o———

'ஆம்' அல்லது 'இல்லை' என்று சென்ற புதன்கிழமை தீர்ப்பு வழங்கின வாக்காளர்களில் எதற்கும் ஆமாச் சொல்லப் பழகினவர்களின் வாக்குச் செல்வாக்குப் பெற்றுவிட்டது! கேட்ட கேள்வி என்ன? என்று அறிவதற்கு ஒரு விளக்கைக் காட்டிவிட்டு மறுப்புச் சொல்ல ஒரு குடத்தையும் கூடவைத்துவிட்டு வாக்காளர்களின் விருப்பத்தை அறிவது கலிகாலக் கேலிக்கூத்தா? அல்லது அரசியல் நாடகமா?

ஐந்து வருடங்களுக்கு முன் மக்களாலே தெரிவு செய்யப்பட்டவர்கள் இனி ஆறுண்டுகளுக்குக் கும்ப கர்ண நித்திரையில் காலத்தைக் கழிக்க வழிவகுக்கப் பட்டிருக்கிறது. 'ஆறின கஞ்சி பழங்கஞ்சியென்று

# கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல 13999/ ஈடு

பரமசிவம் சரோஜினிதேவி பொலிகண்டி மேற்கு வல்வெட்டித்துறை வழக்காளி

எதிராக

1. கல்லதம்பி பாக்கியலட்சுமி வல்வெட்டி வல்வெட்டித்துறை
2. குமாரையா பரமசிவம் புலோலி தெற்கு புலோலி -எதிராளிகள்

மேற்குறித்த வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை 1983ம் ஆண்டு பெப்பவரி மாதம் 3ம் திகதி (3-2-1983) வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக இருந்து என்னால் முறையே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

| | |
|---|---|
| 1 ம் ஆதனம் | ரூபா 6,000 |
| 2 ம் ஆதனம் | ரூபா 15,000 |

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று நவிண்டில் குறிச்சியிலுறை காணியாய்.

1. இறங்கியன் தோட்டம் நி. ப. 8, 3/8 டை நி. ப. 10½ இதில் 1 ம் துண்டும் 2 ம் துண்டில் வடக்குப பக்கமாக அரைவாசிக்கும் நி. ப. 3, 5/8 இதில் ரோட்டுக்காகக் கழிக்கப்பட்ட நிலம் 5/8 மிகுதி நி. ப. 13ல் ரோட்டுக்கு மேற்குப் பக்கமாக நி. ப. 3 இதில தெற்குப் பக்கமாக நி ப. 1½, எல்லை கிழக்கு குறித்த ரோட்டு வடக்கு கணபதி வேலனுக்கும் ம மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு வல்லி சின்னனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு கணபதிநாச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வேம்புகள் அடங்கலும்,

2. டை பிறை இறங்கியன் தோட்டம் நி. ப. 13 மேற் குறித்த ரோட்டுக்கு கிழக்குப் பக்கத்திலுள்ள நி. ப. 10 ல் தெற்குப் பக்கமாக நி. ப. 5, எல்லை கிழக்கு தம்பையா பெண் தெய்வானைக்குரிய ஆதனம் வடக்கு சடையன் சின்னப்பொடியனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு ரோட், தெற்கு ஆறுமுகம் கந்தசாமிக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வேம்புகள் அடங்கலும்

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 7375 உம் மேலும் வருடமொன்றுக்கு பத்து வட்டி வீதம் வழக்கு ஆணைத் திகதியாகிய 1977 ம் ஆண்டு ஆனி மாதம் 7ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1979 ம் ஆண்டு ஆனி மாதம் 8 ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கு இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 403 / 50, இதில் நடைபெற்ற செலவு ரூபா 239 / 35 நடைபெறவேண்டிய செலவு ரூபா 88 / 75 மேலதிக சமயா சமயச் செலவு ரூபா 75 /40 கொடுக்க வேண்டியிருக்கிறது

புலோலி மேற்கு,
புலோலி,
15-2-82.

நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்.

J. 14 / 82

### மணிவாசகர் விழா

மார்கழி 11 ஆம் நாள் தொடக்கம் 14 ஆம் நாள் வரையும் சிறப்பாக வழமை போல ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான மண்டபத்தில் நிகழும். நல்லை ஞான சம்பந்தர் ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

சொல்வார்களே. பழகிய உறுப்பினர்கள் பழையபடி நாடாளப் போகின்றார்களாம் — ஆளலாம்; ஆனால் அல்லலில் மாளுபவர் மக்களே.

சந்தர்ப்பத்திற்கேற்ற சட்டங்கள். சட்டங்களுக்கிணங்கத் திட்டங்கள் — மட்டந் தட்டப்படுபவர் மக்களே!

வினைப்பயனை வெல்லமுடியாதுதானே! இனிப் பயனை இருந்துபார்ப்போம்!

### ஆராய்ச்சியாளர் யாரைத்தான் விட்டனர்

[10-12-81 இதழின் வளர்ச்சி]

சட்டநிரூபண சபைக்குப் பொருத்தமானவர் இராமநாத ஏந்தல் என்றுணர்ந்து அவருக்காக அயராதுழைத்தது என்பதும் முக்கியமாகப் புலப்படுவதுடன்,

"கிறீஸ்து மத கண்டன சபை, சைவ சமய பரிபாலன சபை" இவையிரண்டும் நிறுவ முயன்றவர் என்பதும் புலனாகும்,

சைவ மக்களைப் புறமதத்தார் தங்கள்பால் ஈர்க்கினார்கள். இது நிறுத்தப்படவேண்டுமென்றெங்கள் குரவர் தமது வாழ்நாட்களை அர்ப்பணித்தார் என்றது மிக மிக முக்கியம்,

கல்வியின் தரம் எவ்வளவும் இலக்கண இலக்கிய வரம்புகளினின்றும் பிறழவிடக் கூடாதென்பதற்காக நாவலர் நூலான் வெளியீடுகள் நாவலர் ஐயாவால் எழுதப்பட்டன என்பதுவும் மிகமுக்கியம்,

முன்னவனூர் கோயிற்
பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள
வாரி வளங்குன்றும்
கன்னங் களவு
மிகுத்திடுங் காசினிக்
கென்னரு நந்தி
எடுத் துரைத்தானே,

என்ற திருமந்திர உபதேசத்தைச் சுட்டிக் காட்டி சிவாலயப்பணியின் இன்றியமையாமையை எடுத்துப் புகட்டி அருந்தொண்டாற்றினர். திருக்கேதீச்சரம், வண்ணை, நல்லூர், சிதம்பரம், நகுலேஸ்வரம் — குரவரின் திருப்பணிச்சிந்தையில் எழுந்தன.

எல்லாவற்றிலும் மேலாக நாவலர் நெறி ஒழுக்கம் என்ற உயர்ந்த பண்பைப் பேணும் வகையினது சமய தீட்சை, புலாலுண்ணாமை என்றவற்றைப்பற்றிக் குரவர் குறிப்பிடாதநாளில்லை; எழுதாத நாலில்லை.

ஆகவே நாவலர் நாளில் நாம் எவ்வாறு நாவலர் நின்ற நால்வர் நெறியில் நிற்கின்றோம் என்று எம்மை ஆராய்ந்து திருத்தி நடந்துகொள்வதே சாலச் சிறந்த விழாவாகும்.

(வளரும்)

**HINDU ORGAN**

Fri. 17, 24, 31-12-82

### *Rousing the Spirit within us — Soul-Force by Practice of Religion*

When one feels utterly helpless and humble one finds solace in Gods' Grace. Almost all the miracles ascribed to our Saints portray how God helps the helpless

The genuine feeling that the Tamil people have today is that they have been wronged. Fighting wrongs is a stupendous task. Nations that seek redress of humiliating grevances are often tempted to use violence But that this method has never proved to be efficacious has been established by the universal distress that is unleashed by combatants using physical force aided by deadly weapons of massive destruction It was left to Mahatma Gandhi to evolve a moral method of securing the redress of wrongs He did succeed in finding a moral substitute for the weapon of war. His experiments with Truth enabled him to tap the resources of soul-force The result was so reassuring that the great-sub-continent of India was able to free itself from foreign yoke by the use of that wonderful weapon — Soul Force

But this weapon is not easily to be forged; for it has to be cast by the rigorous use of a raw material that can be found only by search in a religious setting of lofty morals. The Mahatma had told his followers and consequently the people of Bharat that Religion was not what was grasped by the brain but a heart grasp; He insisted that those who dared to seek soul force should have a reasonable grasp of religion and went to the extent of drawing up rules for observance by those who believed in Soul Force

Mere repetition of the magic word "Ahimsa" cannot make us followers of Ahimsa. We have to be trained to practise the lofty precepts of moral purity as prescribed by our religious leaders, the Saints and Sages. the Samayacariyars and Samayakuravars, Gandhiji as a Hindu of Hindus was quick to place the "law of truth" first and fore-most in his code of conduct and devoted his entire life time "to demonstrate the infallibility of the law of Truth" The Shastras of Saiva Siddhantha, the Thirumurais revealed by the Saints, the lucid disclosure of knowledge in the epic works, Thirukural and Thirumanthiram. all teach us the lofty ideal of Truthfulness

As if flowing from the first. Article of his faith, the Mahatma listed the doctrine of Ahimsa next in priority. Love begets love; but the practice of ahimsa has to be undertaken by strenuous, sincere and sustained practice.

The Great Indian leader had cautioned his followers that the practice would be an ordeal of even mental agony and depended in the understanding of religious life.

We in our plight of helplessness would be able to profit by the rich experience of the Satyagrahis of our neighbouring land; only it should not be a parrot-like recital of the slogans of ahimsa and satyagraha. Everyone of us should take the vows of truth and ahimsa and rouse our spirit and realize the real potentiality of Soul Force.

## சிவஞான போதம் மங்கல வாழ்த்து

வித்துவான் மு. கந்தையா அவர்களின்

விளக்கமான சுருக்கம்

சைவ மாணவர்களுக்குத் தக்கதோர் வழிகாட்டி

( முன் வளர்ச்சி 2 )

எல்லார்க்கும் முன்னவர் என்ற முறையில் எக்கரும ஆரம்பத்திலும் பிள்ளையாரை வணங்குதல் ஒரு பொதுநிலை. பிள்ளையார் ஞானமூர்த்தி என்ற முறையில் ஞான விசாரணை ஆரம்பத்தில் அவரை வணங்குதல் சிறப்பு நிலை. சிவஞான போதம் ஞானநூல், ஆதலால் இதில் சிறப்பு நிலை வணக்கமே கூறப்படுகிறது. அதற் கேற்ப, நல்லார் ஞானம் பெறும் வாய்ப்புள்ளார் என்று காட்டப்பட்டது.

ஞானவான்கள் தமது கிரியை ஞானம் என்ற இரண்டையும் விநாயகருடைய கிரியை ஞானங்களுக்குக் கீழ்ப்படுத்தி வணங்குவர். அது அவர்கள் தலைமீதும் விநாயகர் திருவடிகள் மேலும் அமையப் பொருந்தும் தன்மையால் விளங்கும்.

"திருவடி சுமந்து கொண்டு காண்கமாறே" என்ற அப்பர் சுவாமிகள் பாடல் இங்கே நினைவு கூர்தல் தகும்.

சிவஞானம் சிவபெருமானாலேயே அருளப்படுவது. அவரும் விநாயகரும் வேறல்லர். அவருடைய ஞான மூர்த்தமே விநாயகர் அவ்வகையால், விநாயகர் திருவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கச் சிவனருளால் சிவஞானம் வாய்க்கும் என்க

மக்கள் தம்மைப் பிடித்துள்ள ஆணவத்தால் விளையும் மயக்கந் தீர்த்த ஞானம் பெறும் வகையை விளக்குவது சிவபோதம் அதற்குப் பொருத்தமாக, சிவபெருமான் நந்திதேவர் முதலியவர்களுக்கு மயக்கம் நீக்கிய செய்தியைத் தொடர்பு படுத்துவதே சிறப்பாகும். ஆதலால் 'மலைவிலார்' என்பதற்கு இங்கு கொண்ட பொருளே பொருத்தமான பொருள் ஆகும். அன்றி மலை வலார் — மலையை வில்லாகக் கொண்டவர் என்று பொருள் கொள்ளினும் கொள்ளலாம். ஆனால் மேற் கண்ட பொருளுக்குரிய சிறப்பு இதற்கில்லை.

சிவன் உயிர்க்கு முதலில் ஞானத்தைக் கொடுக்க வேண்டும். பின் அதன் மூலமாக உயிர் தன்னை அடைந்து இன்புற வழி செய்ய வேண்டும். அத்துடன் முடிவில இன்பத்தையுஞ் சிவனே வழங்கவும் வேண்டும். இந் நோக்கில் சிவன் முதல்வனாகும் பெறுகிறார். அவர் அருளாலன்றி யாதும் ஆகாது. இந்த உண்மைக்கு இணக்கமாகப் பொருள் கொள்ளும் போது இந்த வாழ்த்தில் உள்ள 'அருளில' என்பதற்கு 'அருளும் பொருட்டு' எனக் கொள்வதே சிறப்பாகும். அன்றி, 'அருளிய பெரியோர் — பெற்றெடுத்த பெரியோரப் பிள்ளையார் என்று கொள்ளும் பொருள் சிறப்பாகாது.

சிவஞான போதம் பொருளளவிற் பெருக்கத்திற் பெருக்குள்ள தாயினும் சொல்லளவிற் சுருக்கத்திற் சுருக்கமான ஒரு சாஸ்திரம். இந்நூலின் சூத்திரங்கள் மிகச் சுருக்கமானவை. அது போலவே இந்த மங்கல வாழ்த்தும் சுருக்கமான சிறு சொற்களாலான மிகச் சிறு செய்யுளாய் அமைந்திருக்கின்றது.

நீதியார் பெம்மான் நின்றாடும்

( 1 - ஆம் பக்கத் தொடர்ச்சி )

திருச்சிற்றம்பலம்

போதன் போதன் கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி அலர்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே

திருச்சிற்றம்பலம்

இவ்விருசாதனங் இருக்கவும் நாம் ஏனோ இவற்றைப் பூரதிடர்ப்படுகின்றோம்! அப்பனை அகத்தமைத்தானந்தம் கொண்ட அப்பர் அடிகள்

திருச்சிற்றம்பலம்

மஞ்சன் வார்சடைச் சூழ்பங் கலக்குடி
நஞ்ச மராமு தாக நயந்துகொண்
டஞ்சு மாடல் அமர்ந்தடி யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு நின்றதே

திருச்சிற்றம்பலம்

என்று திருவாய்மலர்ந்ததையும் இங்கு நோக்கி இன்புறுவோமாக.

## Gandhiji is the Greatest Exponent of Satyagraha

### Gave Golden Advice on its Good Use

Speaking about Satyagraha as a spiritual instrument Mahatma Gandhi on one occasion, had to issue a note of warning

In 1934 in his PATNA STATEMENT, said Gandhiji

"I feel that the masses have not received the full message of Satyagraha owing to its adulteration in the process of transmission. It has become clear to me that spiritual instruments suffer in their potency when their use is taught through non-spiritual media. Spiritual messages are self-propagating."

At the Amirtsar Congress, Gandhiji made this pointed observation that success would be the people's if only they observed non-violence and returned madness with sanity

How Ahimsa has its roots in religion may be seen from the Mahatma's thoughts on Religion

Religion is a thing not alien to us; it has to be evolved out of us. It is always within us; with some, consciously so, with others quite unconsciously But it is always there And whether we wake up this Religious instinct in us through assistance or by inward growth, no matter how it is done, it has got to be done, if we want to do anything in the right manner, or to achieve anything that is going to persist.

Clarifying his views further the Mahatma, sees Ahimsa as the soul of Truth and non-violence as the highest religion

The present situation calls for re-reading the works of Navalar Peruman, Patriot Ponnampalam Ramanathan and Mahatma Gandhi and making ourselves equipped with sufficient understanding to take up the remorseless challenge of irreligion

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K S. Road, Vannarponnai, Jaffna. (Telephone: No. 22336) on Friday, 17, 24, 31-12-82*

Editor in Chief:
R. N. Sivapirakasam

